

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மதுரையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான YonexSunrise அகில இந்திய ஜூனியர் தரவரிசை இறகுப்பந்து போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி அவர்களின் பேத்தி வர்ணா பிரபு ஆனந்த் மற்றும் அவருடன் இணைந்து விளையாடிய மித்திலேஷ் பி. கிருஷ்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (30.10.2025) மதுரையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### அடக்குமுறைச் சட்டங்களின்

# ஆதிக்கத்திலிருந்து நம் மக்களை மீட்டவர்!

## பசும்பொன் தேவர் திருமகனார் குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, நவ. 1–

நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் மரியாதையைச் செலுத்திய பின்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**அடக்குமுறைச் சட்டங்களின் ஆதிக்கத்தில் இருந்து நம் மக்களை மீட்டு, நேதாஜி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் எனது மரியாதையைச் செலுத்தினேன். மேலும் மதுரை தெப்பக்குளத்தில் மானம் காத்த மருதிருவர் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலை அணிவித்து வணங்கினேன்.**

**பசும்பொன்னில் மாபெரும் திருமண மண்டபம் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்பை வெளியிட்ட மனநிறைவுடன் சென்னைக்குத் திரும்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.10.2025) மதுரையில், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தமிழ்நாட்டில் உரத் தட்டுப்பாடு இல்லை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி

*சிவகங்கை, நவ. 1-*

*சிவகங்கை மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா சிவகங்கையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.*

*கடந்த நான்கு ஆண்டுகளாக மாணவர்களின் திறமையை வெளிக் கொண்டு வரும் வகையில் பள்ளி கல்வித்துறை சார்பில் முதல்வர் உத்தரவின் பேரில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் முயற்சியினால் இத்தகைய கலை திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றது.*



*இதில் மாணவர்களின் கல்வி தவிர்த்து அவர்களின் பல்வேறு திறமைகள் வெளிப்படும் வாய்ப்புகள் உள்ளது.*

*இதன் மூலம் மாணவர்கள் திறமை வெளிப்படும் .அவர்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிவகை ஏற்படுகிறது.*

*தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு இல்லை. உரம் போதிய அளவு கையிருப்பில் உள்ளது.*

*அவ்வாறு எங்காவது உரம் இல்லை என்றால் கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கலாம்.*

*அந்த இடங்களுக்கு உரங்கள் அனுப்பி வைக்கப்படும். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கள்ளக்குறிச்சி கரூர் சம்பவம் குறித்து தொடர்ந்து திமுக மீது குற்றம் சாட்டி வருகிறார் என்று கேட்டதற்கு அமைச்சர் கூறியதாவது. தமிழக பா.ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன் நல்லது நடந்தால் பாஜக பிரதமர் மோடி என்றும் ,ஏதாவது துயர சம்பவம்நடந்தால் தி.மு.க தான் பொறுப்பு என்று சம்பந்தமில்லாமல் பேசுவார்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார்.*

*பேட்டியின் போது திருமதி தமிழரசி ரவிக்குமார எம்.எல்.ஏ. மாவட்ட துணை செயலாளர்த.சேங்கைமாறன், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம் ஆகியோர் உடன் இருந்தார்கள்.*

### அம்பத்தூர் 87–வது வார்டில்

# முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி. தலைமை!

*சென்னை, நவ. 1 -*

*அம்பத்தூர் 87-வது வார்டு மாமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா தலைமையில் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர பகுதி சபை கூட்டம் 28.10.2025 - செவ்வாய்க்கிழமை அன்று காலை பாடி - மஞ்சகுப்பம் மருத்துவமனை அருகில் உள்ள 87-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர கூட்டம் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது.*

*மாமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ.பி.பூர்ணிமா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பகுதி சபை உறுப்பினர்கள் பி.ஜனார்த்தனன், ஆர்.முனியன், எம்.பாஸ்கர், ஏ.அருள்ராஜ், எஸ்.பி.ராஜா, என்.ராஜ்மோகன், டி.சுரேஷ்பாபு,எம். ராஜேஸ்வரராவ் மற்றும் மாவட்ட பிரதிநிதி பாஸ்கர், தொண்டர் அணி பகுதி துணை அமைப்பாளர் எம்.ராஜா ஆகியோர் கலந்து கொண்டு மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்ததோடு, அப்பணிகள் சம்பந்தமாக உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கும்படியும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டனர்.*

### ‘என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச் சாவடி’, முன்னெடுப்புப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு,

# கரூர் மாவட்டம் என்றும் கழகத்தின் கோட்டை என்பதை மீண்டும் நிரூபிப்போம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பேச்சு!

கரூர், நவ. 1–

கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.எல்.ஏ.2, பி.டி.ஏ. நிர்வாகிகள் கலந்து கொண்ட ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி’ ஆலோசனைக் கூட்டம் கரூர் பிரேம் மஹாலில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ கூட்டத்தில் பேசியதாவது:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆசிகளுடன், தமிழ்நாடு முழுவதும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும், என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்கு சாவடி, என்கிற முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தை பொறுத்த அளவில், 1055 வாக்குச்சாவடிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நவம்பர் 1ம் தேதி முதல் டிசம்பர் 10ஆம் தேதி வரை 40 நாட்கள் பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு வாக்குச்சாவடி என்கிற அளவில் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நான் இன்று வரவில்லை நீங்கள் நடத்துங்கள் என எந்த செயலாளரும் கூற முடியாது. தலைவர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். அதன்படி சம்பந்தப்பட்ட செயலாளர்கள் நேரில் செல்ல வேண்டும். இது கடமை.

மாலை 3:30 மணிக்கு வாக்குச்சாவடி அளவில் கூட்டம் நடத்தி, அதன் பின்னர் அனைத்து நிர்வாகிகளும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்ளுடன் சேர்ந்து இப்பணியை ஒவ்வொரு நாளும் செய்யவேண்டும். வாக்காளர் பட்டியலை சரி பார்க்க வேண்டும். தலைமை கழகம் வழங்கியுள்ள படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். அதில் அப்பகுதியில் உள்ள சவால்கள், பிரச்சினைகள் மக்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும். கழக அரசு அந்த வாக்குச்சாவடி பகுதியில் செய்துள்ள சாதனைகளை எடுத்து கூற வேண்டும்.

100 வாக்குகளுக்கு ஒருவரை தேர்வு செய்து, பூத் ‘கிட்’ வழங்கப்பட்டுள்ளன. அதில் ஸ்டிக்கர்கள், பேட்ஜ் இருக்கும். அதனை பயன்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டும்.

மாலை 4.30மணிக்கு வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்களின் பிரதிகளை நேரில் வழங்க வேண்டும்.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கழகம் பெற்ற வாக்குகள், 2024 நாடாளுமன்ற தேர்தலில் பெற்ற வாக்கு விவரங்களை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும், கூடுதலாக 70 வாக்குகள் அதிகமாக வாங்க வேண்டும் என தலைவர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். எழுபது வாக்குகள் என்றால் சுமார் 30 குடும்பங்கள் இருக்கலாம். அவர்கள் அனைவரையும் உதயசூரியனுக்கு வாக்களிக்க கோரிக்கை வைக்க வேண்டும். இதற்கான பட்டியல்கள் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒரு பூத்துக்கு ஒரு வாட்ஸ் அப் குழு, ஏற்படுத்தப்பட்டு, கழக அரசின் சாதனை விளக்க துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் 1055 வாக்குச் சாவடிகளுக்கும் ஏற்கனவே மஞ்சள் கையேடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதை கையோடு எடுத்துச் செல்ல வேண்டும். முகவரி மாற்றம், இருந்தாலும் , 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் இருந்தாலோ, அது குறித்த விபரங்களை சேகரிக்க வேண்டும். தகுதியுள்ள நபர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதை உறுதி செய்து, தகுதியற்ற நபர்கள் நீக்கம் செய்வதை கண்காணிக்க வேண்டும்.

இப்பணிகளை சிறப்பாக செய்தாலே, 234 தொகுதிகளிலும், கரூர் மாவட்டத்தில் 4 தொகுதிகளிலும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றி பெறலாம். வாக்குச்சாவடி அதிகாரிகள் மூன்று முறை வீடுகளுக்கு வந்து படிவம் கொடுப்பர். முப்பது நாட்கள் இப்பணியில் ஈடுபடும் அவர்களுக்கு நாம் உதவி செய்வது, ஆட்சேபனைகளை தெரிவிப்பது, என கவனமாக இருக்க வேண்டும். நமது பணியை சரிவர செய்யாவிட்டால் எங்கிருந்தோ வந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்த்து விட வாய்ப்புள்ளது. இது திராவிட மண். அந்த எண்ணம் இங்கு ஈடேறாது. 2026 தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றி பெற்று தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பினை மீண்டும் ஏற்பதற்கான பணிகளை சிறப்பாக செய்வோம்.

எனது சொந்த ஊரில் 20 வாக்குச் சாவடிகள் உள்ளன இரண்டாம் தேதி முதல் தினம் ஒரு வாக்குச்சாவடி என சென்று இப்பணிகளை மேற்கொண்டு வாக்கு சேகரிக்க இருக்கிறேன். அனைத்து நிர்வாகிகள், எம்எல்ஏக்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் இப்பணியில் ஈடுபட வேண்டும். தனி மனிதனுக்கு பாராட்டு என்கிற நிலைமை அல்ல. அனைவரது உழைப்பிலும்தான் வெற்றி இருக்கிறது. கரூர் மாவட்டத்தில் ஒன்பது லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். கரூர் மாவட்டம் என்றும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோட்டை என்பதை மீண்டும் நிரூபிப்போம். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கழக மாநில நிர்வாகிகள் நன்னியூர் ராஜேந்திரன், என்.மணிராஜ், பரணி கே.மணி, எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க.சிவகமசுந்தரி, மற்றும் கரூர் முரளி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், கரூர் மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்எஸ்கே. கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என்.செல்வராஜ், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர் எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ். குமார், எம்.பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ.ராமர், எம் எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவிராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி முத்துக்குமாரசாமி, வி.கே.வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், புகழூர் நகர செயலாளர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் வாசிம் ராஜா,

பொதுக்குழு உறுப்பினர்கள் என் எஸ்.ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி.ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி,

அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், ஆர்ஜி. சரவணமூர்த்தி, சிவா, நந்தினி தேவி, தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், அருணா பொன்னுசாமி, வி.அருண், பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, தியாகராஜன், எம்.பிரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லசாமி, எஸ்.மனோகர், எம்ஆர்எஸ் சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர் அண்ணா வேலு, வழக்கறிஞர் என். செந்தில்குமார், டிஎம்.பஷீர்அகமது, முன்னாள் எம்எல்ஏக்கள் பி.காமராஜ், எஸ். காமராஜ், மற்றும் இரா. பிரபு, ஆர். ராமசாமி, ஆர்.கந்தசாமி, கா. அன்பரசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கனகராஜ், ராஜா, பாபு, அருண், யுவராஜ், வழக்கறிஞர்கள் இரா. குடியரசு, பி.லட்சுமணன், பிச்சை முத்து, டி. ராஜேஸ்வரி, டி.நீலமேகம், சாகுல் ஹமீது, ரமேஷ், பாலசுப்பிரமணியன்,

மாநகர கழக நிர்வாகிகள் கேவி. தங்கவேல், கேஎஸ்.அறிவின்ஸ், எம் நிஷா, அங்கு நா.பசுபதி, ஆர்.வெங்கடேஷ், கேஎம்.பாலகிருஷ்ணன், பி. சண்முகம், கேஆர்.சுந்தர்ராஜன் ஏ. ஆரோக்கிய ஜெயபால், பி.பழனிவேல், ஜி.ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அக.இளமுருகு மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### ‘தாட்கோ’ மூலம் கண்ணகி நகரில்

# கபடிக்கு சிறப்பான பயிற்சி மையம்!

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத் துணைத் தலைவர் இமையம் தகவல்!

*சென்னை, நவ. 1-*

*29.10.2025 அன்று ஆணையத்தின் சார்பில் பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி போட்டியில், இந்திய அணியின் துணைத் தலைவராக சென்னை, கண்ணகி நகர் கார்த்திகா பங்கேற்று சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்று தாயகம் திரும்பியவருக்கு ஆணையத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.*

*நிகழ்ச்சியில் ஆணைய உறுப்பினர்கள் மூ.பொன் தோஸ், இளஞ்செழியன், கார்த்திகா, அவரது தாய், தந்தை மற்றும் பயிற்சியாளர் மற்றும் ஆணையத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். உறுப்பினர் செல்வகுமார் வரவேற்புரையாற்றினார். ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன், துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். உறுப்பினர் முனைவர் சு.ஆனந்தராஜா நன்றியுரையாற்றினார்.*

*ஆணையத்தின் துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் பேசும்போது, “கபடி விளையாட்டில் சிறப்பாக விளையாடி பெருமைக்குரிய வெற்றியை பெற்றிருக்கிற வீராங்கனை கார்த்திகா அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள். கபடி போட்டியில் தங்கம் வென்றுள்ள கார்த்திகா அவர்களை ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ரூ.25,00,000/- பரிசுத் தொகை வழங்கியுள்ளனர். கண்ணகி நகரில் கபடிக்கென்று சிறப்பான பயிற்சி மையம் தாட்கோ மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. வெற்றி பெறுவதற்கு உழைப்பு தான் முக்கியம். பொருளாதாரமோ, சாதியோ காரணமாக அமைவது இல்லை. தற்போது கார்த்திகா பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி போட்டியில், இந்திய அணிக்காக பங்கேற்று விருது பெற்றிருக்கிறார். அவர் வருகின்ற ஒலிம்பிக் போட்டியிலும் கபடி அணியில் சிறப்பாக விளையாடி தங்கம் வெல்ல வேண்டும்.*

**தமிழ்நாட்டு விளையாட்டுத்துறை உலகளாவிய கவனம் பெற்றுள்ளது!**

*துணை முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டு விளையாட்டுத் துறை உலகளாவிய கவனம் பெற்று வருகிறது. விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தேவையான பயிற்சிகளும், வசதிகளும் உலக அளவில் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஊக்கத் தொகையும், அரசு வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறைக்கு பொற்காலம்.*

*விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் என்றும் துணையாக இருப்பார்கள். கார்த்திகா அவர்களுக்கு ஒரு வீடும், அரசு வேலையும் வழங்க வேண்டும் என்று அவரது தாயாரும், பயிற்சியாளரும் கோரிக்கை வைத்தார்கள். இக்கோரிக்கையை நிறைவேற்ற அரசிடம் பேசுகிறேன். தமிழ்நாட்டின் பெருமையாக இருக்கிற கார்த்திகா தொடர்ந்து பல வெற்றிகளை பெற வேண்டும்” என்று வாழ்த்தினார்.*

*ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் வாழ்த்தி பேசும் போது, “இன்று தமிழ்நாடே கொண்டாடும் விளையாட்டு வீராங்கனையாக இருக்கும் கார்த்திகா தொடர்ந்து பல வெற்றிகளை பெற வேண்டும். விளையாட்டுப் பிரிவில் தங்க மங்கை பி.டி.உஷா அவர்களுக்குப் பிறகு, கார்த்திகா அவர்களும் தங்க மங்கையாக விளங்க வேண்டும். தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் தொடர்ந்து பெருமை சேர்க்க வேண்டும்” என்று வாழ்த்தினார்.*

### தி.மு.க. பொறியாளர் அணி

# மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன் அவர்கள் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **எம்.ஆர்.எம்.பி. முரளிதரன்,** (12 135, பாலமேடு, வாடிப்பட்டி, மதுரை) அவர்கள் மதுரை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை – 18**
**நாள்: 30–10–2025.**

**கு. கருணாநிதி**
**செயலாளர்,**
**தி.மு.க. பொறியாளர் அணி**



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் சார்பில் பஹ்ரைனில் தங்கப் பதக்கம் வென்ற கபடி வீராங்கனை கண்ணகி நகர் கார்த்திகாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன், துணைத் தலைவர் எழுத்தாளர் இமையம் ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்தினர். உடன் ஆணைய உறுப்பினர்கள் உள்ளனர்.




கரூர் மாநகராட்சி வார்டு எண் 47க்கு உட்பட்ட சுக்காலியூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நிறைவு விழா கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், ஆணையர் கேஎம்.சுதா, மண்டல குழு தலைவர் எஸ்பி.கனகராஜ் அருகில் உள்ளனர்.